## ஜு ம்ஆவின் முதல் க்ஹு த்பா

إِنَّ الْحَمْدَ لِلّٰهِ، نَحْمَدُهُ وَنَسْتَعِيْنُهُ وَنَسْتَغْفِرُهُ، وَنُؤْمِنُ بِهِ وَنَتَوَكَّلُ عَلَيْهِ، وَنَعُوْذُ بِاللهِ مِنْ شُرُوْرِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلاَ هَادِيَ، وَنَشْهَدُ أَنْ لاَّ إِلٰهَ إِلاَّ اللهُ وَنَشْهَدُ أَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ أَرْسَلَهُ بِالْحَقِّ بَشِيْراً وَّنَذِيْراً بَيْنَ يَدَيِ السَّاعَةِ مَنْ يُّطِعَ اللهَ وَرَسُوْلَهُ فَقَدْ رَشَدَ وَمَنْ يَعْصِهِمَا فَإِنَّهُ غَوَى وَإِنَّهُ لاَ يَضُرُّ إِلاَّ نَفْسَهُ وَلاَ يَضُرُّ اللهَ شَيْئاً. إِنَّ خَيْرَ الْحَدِيْثِ كِتَابُ اللهِ، وَخَيْرَ هَدْيٍ هَدْيُ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، وَشَرَّ الْأُمُوْرِ مُحْدَثَاتُهَا وَكُلُّ مُحْدَثَةٍ بِدْعَةٌ وَكُلُّ بِدْعَةٍ ضَلاَلَةٌ وَكُلُّ ضَلاَلَةٍ فِي النَّارِ. أَمَّا بَعْدُ، قَالَ اللهُ تَعَالَى فِي كِتَابِهِ الْمَجِيْدِ: أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ، بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ،

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِذَا نُودِيَ لِلصَّلَوٰةِ مِن يَوۡمِ ٱلۡجُمُعَةِ فَٱسۡعَوۡاْ إِلَىٰ ذِكۡرِ ٱللَّهِ
وَذَرُواْ ٱلۡبَيۡعَۚ ذَٰلِكُمۡ خَيۡرٞ لَّكُمۡ إِن كُنتُمۡ تَعۡلَمُونَ ٩ فَإِذَا قُضِيَتِ ٱلصَّلَوٰةُ
فَٱنتَشِرُواْ فِي ٱلۡأَرۡضِ وَٱبۡتَغُواْ مِن فَضۡلِ ٱللَّهِ وَٱذۡكُرُواْ ٱللَّهَ كَثِيرٗا لَّعَلَّكُمۡ تُفۡلِحُونَ
١٠ وَإِذَا رَأَوۡاْ تِجَٰرَةً أَوۡ لَهۡوًا ٱنفَضُّوٓاْ إِلَيۡهَا وَتَرَكُوكَ قَآئِمٗاۚ قُلۡ مَا عِندَ ٱللَّهِ خَيۡرٞ مِّنَ ٱللَّهۡوِ
وَمِنَ ٱلتِّجَٰرَةِۚ وَٱللَّهُ خَيۡرُ ٱلرَّٰزِقِينَ ١١

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيمِ وَأَسْتَغْفِرُ اللهَ لِي وَلَكُمْ وَلِسَائِرِ الْمُسْلِمِينَ، إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ.

*பொருள்: புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே, நாங்கள் அவனையே புகழ்கின்றோம், அவனிடமே உதவி நாடுகிறோம், அவனிடம் பாவமன்னிப்புக் கோருகின்றோம், அவன்மீது ஈமான் கொள்கின்றோம், மேலும், அவனையே*

www.uzairfalahi.com

நாடியும் இருக்கின்றோம். நாம் எங்களுடைய நஃப்சுகளின் தீங்கிலிருந்தும், எங்கள் தீய செயல்களிலிருந்தும் அவனுடைய பாதுகாப்பு தேடுகின்றோம். அல்லாஹ் யாரை நேர்வழியில் நடத்துகின்றானோ அவரை வழி கெடுப்பவன் யாரும் இருக்கமுடியாது, ஆனால், யாரை அல்லாஹ்வே வழி கேட்டில் விட்டுவிடுகின்றானோ அவரைநேர்வழியில் செலுத்துவோர் யாருமில்லை. அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்று நாங்கள் சாட்சி கூறுகின்றறோம், மேலும், முஹம்மத் (ஸல்) அவர்கள்அவனுடைய தூதர் என்றும் சாட்சி கூறுகின்றறோம். சத்தியத்தின் செய்தியைக் கொண்டு நற்செய்தி அளிப்பவராகவும் எச்சரிக்கை செய்பவராகவும் அவர்களை அல்லாஹ் தூதராக அனுப்பியள்ளான், இறுதி நாளுக்கு முன்பாக, யாரெல்லாம் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் கீழ்ப்படிந்து நடந்துகொள்வாரோ அவர் நேர்வழியினை அடைந்துவிட்டார், யார் அல்லாஹ்வையும் தூதரையும் மாறு செய்வாரோ அவர் வழிகேட்டில் சென்று விட்டார்கள், அவர் தம்மையேயன்றி யாரையும் நஷ்டத்தை ஏற்படுத்தவில்லை, மேலும், அவர் ஒருபோதும் அல்லாஹ்வுக்கு எந்த தீங்கையும் ஏற்படுத்த முடியாது. நிச்சயமாக, வாக்குகளில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும், வழிகாட்டுதலான மார்க்கங்களில் சிறந்தது முஹம்மத் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டுதலாகும், வாழ்க்கையின் வழிமுறைகளிலே மிகவும் கேடானவை புதிதாகப் புனைந்து கடைபிடிக்கப்பட்டவையாகும், புதிதாகப்புனைந்து மேற்கொள்ளப்படுபவை அனைத்துமே பித்அத்துகளாகும், பித்அத்துகள் அனைத்துமே வழிகேடானவை, வழிகேடானவை அனைத்துமே நரககத்தில் கொண்டுசேர்க்கும். அல்லாஹ்வைப் புகழ்ந்து துதித்தவனாகக் கூறுகிறேன், அல்லாஹ் தஆலா தன்னுடைய புனித வேதத்தில் கூறுகின்றான்:

*சபிக்கப்பட்ட ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் புகலிடம் தேடியவனாக, அருளாளனும் மிக்க அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக்கொண்டு துவங்குகிறேன்.*

*இறைநம்பிக்கை கொண்டவர்களே, வெள்ளிக்கிழமையன்று தொழுகைக்காக அழைக்கப்படும்போது அல்லாஹ்வை நினைவுகூர்வதற்காக விரைந்து செல்லுங்கள், கொடுக்கல் வாங்கலை விட்டுவிடுங்கள், நீங்கள் அறிந்தவர்களக இருந்தால் இது உங்களுக்கு மிகச்சிறந்ததாகும். பின்னர், தொழுகை நிறைவேற்றப்பட்டுவிட்டால், பூமியில் பரவிச்செல்லுங்கள், அல்லாஹ்வின் அருளைத்தேடுங்கள் மேலும், அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூர்ந்தவண்ணம் இருங்கள், உங்களுக்கு வெற்றி கிடைக்கக்கூடும். அவர்கள் வியாபாரத்தையோ விளையாட்டு வேடிக்கைநடைபெறுவதையோ பார்த்தபோது அவற்றின்புறம் பாய்ந்து சென்றுவிட்டார்கள், மேலும், உம்மை நின்ற நிலையில் விட்டுவிட்டார்கள். அவர்களிடம் கூறும், அல்லாஹ்*

www.uzairfalahi.com

*விடம் இருப்பவை விளையாட்டு வேடிக்கை மற்றும் வியாபாரத்தைவிடச் சிறந்தவையாகும், மேலும், அல்லாஹ் அனைவரைவிடவும் சிறந்த வாழ் வாதாரம் வழங்குபவனாக இருக்கின்றான் (அல் ஜுமுஆ:9,10,11).*

அல்லாஹ் தஆலா இந்த ஃகுர்ஆனைக்கொண்டு நம் அனைவர்மீதும் அருள் புரிவானாக, நான் எனக்காகவும் உங்களுக்காகவும் அனைத்து முஸ் லிம்களுக்காகவும் அல்லாஹ்விடம் பாவமன்பனிப்புக்கோருகின்றேன், நிச் சயமாக, அவன் உயர்வானவனாகவும், கொடையாளனாகவும் ஆட்சியதி காரம் கொண்டவனாகவும் கருணை புரிபவனாகவும் அன்புடையோனா கவும் இருக்கின்றான்.

* * *

www.uzairfalahi.com